நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்
வழங்கல் துறை,
தலைமை செயலகம்,
சென்னை.9

கடித எண்.21257/நநி2/2000-1, நாள் : 7.8.2000

விடுநர்
திரு. க. மகாராஜன், பி.எஸ்சி., பி. எல்.,
அரசு கூடுதல் செயலாளர்.

பெறுநர்
திட்ட இயக்குநர்,
தமிழ்நாடு இரண்டாம் நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், சென்னை - 5.
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5.
ஆணையர், கோயம்புத்தூர்/மதுரை/திருநெல்வேலி மாநகராட்சிகள்.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை-108.

அய்யா,

பொருள் : நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் - புதிய கணக்கு வைப்பு முறை - நடைமுறைப்படுத்துதல் - ஆணை வெளியிடப்பட்டது - திருத்தம் வெளியிடப்படுகிறது.

பார்வை : 1. அரசாணை(நிலை) எண்.3, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 12.1.2000.
2. திட்ட இயக்குநர் கடித எண்.PMU/FS/275/99, நாள் : 6.6.2000.

- - -

பார்வை ஒன்றில் குறிப்பிட்டுள்ள அரசாணையில் 1.4.2000 முதல் 92 நகராட்சிகள் மற்றும் மூன்று மாநகராட்சிகளிலும் புதிய கணக்கு வைப்பு முறையை நடைமுறைப்படுத்த ஆணையிடப்பட்டது. மேலும் நகராட்சி, மாநகராட்சி பணியாளர்கள் புதிய கணக்கு வைப்பு முறையை பழகிக்கொள்ளும் வரையிலும் புதிய கணக்கு முறையுடன் பழைய கணக்கு வைப்பு முறையினையும் முதல் 6 மாதத்திற்கு தொடர்ந்து பின்பற்றவும் ஆணையிடப்பட்டது.

2. இரண்டு கணக்கு முறையையும் பின்பற்றுவது கூடுதல் வேலைப் பளுவை ஏற்படுத்துவதுடன் இது புதிய கணக்கு வைப்பு முறைக்கு மாறுவதற்கு இடைஞ்சலாக உள்ளதாகவும், புதிய கணக்கு வைப்பு நடைமுறை மேம்படுத்தப்பட்ட திட்டம் என்றும், இதைக் கடைப்பிடிப்பதில் எவ்வித இடையூறும் ஏற்படும் வாய்ப்பில்லை என்றும், தற்போது மூன்றிலிருந்து ஐந்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் ஒரு ஆலோசகர் வழிகாட்டுதலுக்கு உள்ளதாகவும், இவர்களுடைய ஒத்துழைப்பு இறுதி கணக்கு தயாரிக்கும் வரையிலும் கிடைக்கும் என்றும், எனவே நகர்ப்புற உள்ளாட்சி பணியாளர்கள் புதிய கணக்கு வைப்பு முறையை மட்டும் பின்பற்ற மேற்கண்ட அரசாணைக்கு தகுந்த திருத்தம் வெளியிடும்படி திட்ட இயக்குநர் கோரியுள்ளார்.

3. மேற்கண்ட சூழ்நிலையில், பார்வை ஒன்றில் குறிப்பிடப்பட்ட ஆணையைத் திருத்தி, இனிமேல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் புதிய கணக்கு வைப்பு முறையை மட்டும் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

24/8/2000

அரசு கூடுதல் செயலாளருக்காக.